02.09.2024

O.S.No.221/2016

வா.சா.1.திரு.ராஜசேகரன் த.பெ.வேதநாயகம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு** விசாரணை

1. இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி அந்தோணி சாமியை தெரியுமா என்றால் நன்கு தெரியும். 3ம் பிரதிவாதி, பாதிரியார் அந்தோணிக்கு என்ன உறவுமுறை என்றால் உடன்பிறந்த சகோதரரின் மகன் ஆவார். மேற்படி பாதிரியார் அந்தோணி எனது மனைவிக்கு எவ்வளவு இடம் உயில் எழுதி வைத்தார் என்றால் 1 ஏக்கர் எழுதி வைத்தார். மேற்படி சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் எனது மனைவி தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததன் அடிப்படையில் எனது பெயரில் உள்ளது. எனது மனைவி இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கருக்கு சர்வே எண்.385/B2B ஆகும். மேற்படி சொத்தில் முழுமைபெறாத ஒரு வீடும் உள்ளது, மேற்படி சொத்தினை சுற்றிலும் முள்வேலி அமைத்துள்ளோம். மேற்படி வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. அதன் மின் கட்டணம் நான்தான் செலுத்தி வந்தேன், 3 மாதத்திற்கு முன்பு இந்த மின்இணைப்பிற்கான பெயரை மாற்றி உள்ளார்கள். இந்த விவரங்கள் அனைத்தும 3ம் பிரதிவாதி அந்தோணிசாமிக்கு தெரியுமா என்றால் தெரியும்.